[1980 பிப்ரவரி 6

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, பொதுவாக தமிழ்நாட்டிலே பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டம் பெற்ற மாணவ, மாணவிகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்காத காரணத்தால் வெறுமனே வீட்டில் இருப்பதைக் காட்டிலும் கல்லூரிகளில் சென்று படிக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது. ஆகவே, பட்ட மேல்படிப்பை கல்லூரிகளில் தொடங்கும் எண்ணம் இருக்கிறதா? அத்துடன் பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டம் பெற்றிருக்கிற மாணவர்களுக்கு மாதாமாதம் ஊதியம் கொடுக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பி.யு.சி. வகுப்புகளை எடுத்துவிட்ட காரணத்தால் உபரியாக இருக்கிற ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற வகையில் இந்த ஆண்டு பல்வேறு வகுப்புகளைத் தொடங்க இருக்கிறோம். இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு உபரியாக இருக்கிற ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற வகையில் நாம் புதிய வகுப்புகளைத் தொடங்குவதுதான் உசிதமாக இருக்கும். காரணம் நாம் அரசு பணத்தைச் செலவிடும்போது சிக்கனமாக அல்லது முறையாக செலவிட வேண்டுமென்று கருதுகிறோம். அந்த நிலைமைகளை கருத்திற்கொண்டு புதிய பட்டப் படிப்பு வகுப்புகளைத் தொடங்க வேண்டிய நிலையிலே பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அதுபற்றி பல்கலைக் கழகங்கள் ஆலோசித்து வருகின்றன. எப்படிப்பட்ட பட்டப்படிப்பு வகுப்புகளைத் தொடங்குவது என்று இறுதி முடிவு எடுத்தவுடன் புதிய வகுப்புகளைத் தொடங்க வசதியாக இருக்கும்.

அம்பத்தூர் நகரியத்தில் தெருவிளக்குகள்.

* வினா எண் 68 – திரு. க. சுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் நகரியத்தில் தெரு விளக்குகள் எரியவில்லை என்ற புகார் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: (அ) ஆம்

எா—

(ஆ) அதுபற்றி நகரியம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

1980 பிப்ரவரி 6]

புலவர் கா. கோவிந்தன் : தலைவரவர்களே, அம்பத்தூர் நகரியத்தைப் பறறிய கேள்வி இது. ஆனால் இன்றைக்கு தமிழ் நாட்டிலே எந்த ஊராட்சியில் பார்த்தாலும் தெரு விளக்குகள் எரியவில்லை. இப்போது ஊராட்சி மன்றங்களால் தெரு விளக்குகளுக்கு பல்புகள் வாங்கிக் கொடுப்பது நிறுத்தப்பட்டு, மறு படியும் மின்சார வாரியமே தெருவிளக்குகளைப் பராமரிக்கின்ற முறை அமல்படுத்தப்படுவதாக அறிகிறோம். மின்சார வாரியத்தி லிருந்து ஊராட்சி மன்றங்களுக்குத் தெருவிளக்குகள் பராமரிக்கும் முறை மாற்றப்பட்டபோது எல்லா விளக்குகளுக்கும் பல்பு போட்டுத்தான் மாற்றினோம்; அதைப்போல ஊராட்சி மன்றங் களிலிருந்து மின்சார வாரியத்திறகு மாற்றும்போதும் எல்லா பல்புகளையும் போட்டுக் கொடுத்தால்தான் ஏற்றுக்கொள்வோம் என்று சொல்கிறார்கள். இந்தத் தகராறினால் எந்த ஊராட்சி மன்றத்திலும் தெருவிளக்குகள் எரியவில்லை. எல்லா தெரு விளக்குகளையும் எரிய வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. புலவர் கோவிந்தன் அவர்கள் இந்த அவையிலே பேரவைத் தலைவராக இருந்தவர். ஆகவே இந்த மாதிரி பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமானால் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரலாமே தவிர இப்படி அம்பத் தூர் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் பொதுப்படையான தகவல்களைப் பற்றிப் பேசக் கூடாது. ஆகவே இதற்குரிய தகவல்களைத் தரவேண்டிய அவசியம் இல்லை.

திருச்சி நகரிலுள்ள சாலைகள்.

*வினா எண் 69—திரு. கே. சௌந்தரராஜன்— மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி நகரில் சாலைகள் நீண்டகாலமாக பழுது பார்க்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) பாதாள சாக்கடை வேலைகள் நடைபெற்று வருவதால் சில சாலைகள் பழுது பார்க்கப்படாமல் உள்ளன.

(ஆ) சாலைகளைப் புதுப்பிக்க திருச்சி நகராட்சி தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.